புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# *பாரதியின் தனித்துவம்*

*முனைவர். இரா.விஜயலட்சுமி*
*உதவிப் பேராசிரியர்,*
*வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை – 600 102*

*ஆய்வு நோக்கம்:*

*பாட்டுக்கொரு புலவன் பாக்கள் படிக்குந்தோறும் புதுப்புதுச் செய்திகளை பரிமாறுகின்றன. புதிய யுகத்தை நாவாரக் கூவியழைத்த நவயுகக் கவிஞன் பாரதி என்பார் க.கைலாசபதி. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்திற்கு புத்துயிரூட்டிய பெருமை மகாகவி பாரதியாரையேச் சேரும். அத்தகைய பாரதியின் தனித்துவ பண்புகளை வெளிப்படுத்துவதே ஆய்வின் நோக்கம் ஆகும்.*

*ஆய்வுச்சுருக்கம்:*

*பாரதியின் தனித்துவம் என்ற தலைப்பின் வாயிலாக பாரதியின் சமுதாயப் பார்வை, புதிய யாப்பு அறிமுகம், பாரதியார் கவிதைகளில் உருவகம், பாரதியும் கலைத்தொழில்களும், பாரதியின் மொழிப்பற்று, விடுதலைக்கவி பாரதி, பாரதி பாடல்களில் பெண்ணியம் குறித்து எடுத்துரைக்கப்படுகிறது.*

*திறவுச் சொற்கள்:*

*சமுதாயம், யாப்பு, கவிதை, உருவகம், கலைத்தொழில், மொழி, விடுதலை, பெண்ணியம்.*

*முன்னுரை:*

*சீரிய நலன்கள் மிக்க செஞ்சொற் கவிபாடும் கவிஞர் பெருமக்கள், மக்கள் வாழ்க்கையைச் சீர்திருத்திச் செம்மையுடையதாக்க கைம்மாறு கருதாமல் பாடும் பணியையே பணியெனக் கொண்டு வாழ்பவர்கள். கவிஞர்கள் சமுதாயத்தின் முதுகெலும்பு, அதிலும் பைந்தமிழ் தேர்ப்பாகன் பாரதி ஒரு மகாகவி, சிந்தையால் செயலால் இந்திய தேசத்தை நிமிர்த்திய தீர்க்கதரிசி. பாரதி தனக்கென ஒரு தனிப்பாதை வகுத்து பிற்காலத்தில் தோன்றிய கவிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் முன்னோடியாய் விளங்கியவர். ''தோன்றின் புகழோடு தோன்றுக'' என்ற குறளோவிய கூற்றின் இலக்கணத்துக்கு இலக்கியமாக வாழ்ந்தவர் அத்தகைய சிறப்புபெற்ற பாரதியின் பன்முக சிந்தனையையும் தனித்துவத்தையும் வெளிக்காட்டுகிறது இக்கட்டுரை.*

*பாரதியின் சமுதாயப் பார்வை:*

*பாரதியின் பார்வை தொலைநோக்குப் பார்வை, ''நேற்று'' என்பதை விட ''நாளை'' என்பதே அவரது சிந்தனை. மாறிவரும் சமுதாயத்தைக் கனவு கண்டு, அதையே பாடி, ஒரு புதுச் சமுதாயம் உருவாகத் துணை நின்றவர். இக்கருத்தினை ''பாரதியார் மக்கள் மக்களாய் வாழ்வதற்குரிய மாண்புறு கருத்துக்களைத் தம் கவிதைகளில் விரித்து வைத்துச் சமுதாயத்திற்குப் படைத்துள்ளார். தம் கடமையுணர்ந்து கவிபாடி சமுதாயத்தில் மாற்றம் காண - புதுமை காண முனைந்துள்ளார்'' என்று புலவர் செந்துரைமுத்து அவர்கள் தம் ''பாரதி சிந்தனைகள்'' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

*புதிய யாப்பு அறிமுகம்:*

*காவடிச்சிந்து பாடி, சிந்துக்குத் தந்தை எனப்பட்டார் காலத்திற்க்கேற்ப கவிதை வடிவும் மாறுதலடைவது சிறப்பன்றோ? அதனால் அமெரிக்கக் கவிஞன் வால்ட் விட்மனைப் போற்றி*

*அவரைப்போல புதுக்கவிதையை, வசனக் கவிதையைப் பாடினார். தன் பாடல்கள் உணர்ச்சி வெள்ளமாய்ச் சென்று மக்களிடம் பதிந்து வீறுகொள்ளச் செய்ய விரும்பிய பாரதி இட்ட வித்தே புதுக்கவிதை. இன்று அவை பட்டி தொட்டிகளிலெல்லாம் ஆலமரமாய்க் கிளைத்துச் செழித்துள்ளன. சான்றாக ஒரு பாடல்.*

*"எல்லா உயிரும் இன்பம் எய்துக*
*எல்லா உடலும் நோய் தீர்க்க,*
*எல்லா உணர்வும் ஒன்றாதலுணர்க*
*தான் வாழ்க;*
*அமுதம் எப்போதும் இன்பமாகுக"*

*பாரதியார் கவிதைகளில் உருவகம்:*

*கவிதைக்கு அணிகலன் உருவகப்படுத்துதலே. அதனைப் பாரதியார் மிக நேர்த்தியாகவும், சிறப்பாகவும் தேவைப்படும் இடங்களில் பொருத்தமாக மிக அழகாகவும் கையாண்டுள்ளார். இதனை*

*"உருவகப்படுத்துதல் என்பது இயல்பாகவும் கவிதைக்கு மென்மேலும் மெருகூட்டுவதாக இருக்க வேண்டுமே தவிர இருக்கிற அழகையும் கெடுத்துவிடாமல் இருக்க வேண்டும் கவிதைக்குச் சிறப்பு தரும்.*

*அம்முறை படிப்போர், கேட்போர் மனதில் சொல்ல வந்த கருத்தைச் சிறப்பாகப் பதிவு செய்யும் பாரதி அக்கலையில் வல்லுநர்", பன்முகப் பார்வையில் பாரதியார் என்ற நூலில் சோகு. செந்தில் குமரன் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்.*

*பாரதியும் கலைத்தொழில்களும்:*

*மனித வாழ்வே ஒரு முழுமையான கலைவடிவந்தான். எனவே தான் "வாழ்க்கை ஒரு கலை" என மொழிந்தனர் சான்றோர். மனிதன் சிந்திப்பதும் ஒரு கலைதான். பாரத நாட்டில் பல்வேறு கலைத் தொழில்கள் சிறந்து விளங்கின. (இந்நாட்டுக் கலைத்தொழிகள் பலவற்றைப் பாரதியார் தம் பாடல்களில் குறிப்பிட்டு உணர்த்துகின்றார்).*

*"உழவுத் தொழிலை மனித வாழ்வின் உயிர்த் தொழில் எனவும், உடைத் தொழிலை மானம் பேணுந் தொழில் எனவும் கொள்வர். உழவுத் தொழில் வளம் பெறவில்லையெனில், உணவுப் பொருட் பற்றாக்குறை தோன்றி வறுமையும், பஞ்சமும் தோன்றி, நோய்கள் மலிந்து வாழ்வின் இறுதியே நெருங்கி விட நேரும். உடைத் தொழில் சீர்மை பெறவில்லையெனில் உடை வகையில் தட்டுப்பாடு ஏற்பட நேரும்".*

*என்று புலவர் செந்துரைமுத்து அவர்கள், தம் பாரதி சிந்தனைகள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

*இவ்விரு தொழில்கள் குறித்துப் பாரதியார் பாடுங்கால்,*

*"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"*
*"பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்*
*பண்ணி மலைகளென வீதி குவிப்போம்"*

*என்று உழவு மற்றும் உடைதொழிலின் முக்கியத்துவத்தையும் பண்டமாற்று முறையினையும் விளக்குகின்றார்.*

*பாரதியின் மொழிப்பற்று:*

*பாரதிக்குத் தமிழ்மொழி மேல் ஆழ்ந்த பற்று உண்டு. மதுரமான தமிழின் ஓசை பாரதம் முழுவதும் ஏன்? உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்று கனவு கண்டார்.*

*"வானம் அறிந்ததனைத்தும் அறிந்து*
*வளர்மொழி வாழியவே"*

*எனப்பாடினார். இன்று தமிழ் மொழி செம்மொழி, அறிவியல் தமிழ், ஆட்சித் தமிழ், கணினி தமிழ் எனப்பல வளர்ச்சிப் படிநிலைகளைப் பெற்று விளங்குகிறது.*

விடுதலைக்கவி பாரதி:

இந்திய விடுதலை பற்றி எத்தனையோ கவிஞர்கள் பாடல்களை பாடியுள்ளனர். ஆனால் பாரதியை போல் சுதந்திரத்தை பற்றி பாடவில்லை எனலாம்.

"என்று தனியும் இந்த சுதந்திர தாகம்:
"சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே"
"ஆடுவோமே – பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று"

என்று சுதந்திரம் அடைவதற்கு முன்பே சுதந்திரத்தைப் பற்றி பேசினார்.

பாரதி பாடல்களில் பெண்ணியம்:

பாரதியின் பெண்ணியச் சிந்தனை ஆண்களுக்கு நிகரான உரிமை பெண்களுக்கு வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. பெண்ணியம் என்றால் என்ன? என்பதற்கு "என்சைக்ளோபீடியா பிரிட்டானியா கலைக்களஞ்சியம்" "பெண்ணியம் என்ற சொல் மிக அண்மை காலத்தில் தோன்றி வளர்ந்து வருகிறது. அது பெண்களின் உரிமைக்காக போராடும் ஒரு புதிய இயக்கமாகும்" என விளக்கம் கூறுகிறது.

இன்றையக் காலக்கட்டத்தில் பெண்கள் எல்லா துறைகளிலும் சாதித்து மாசக்தி வாய்ந்த பெண்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனை பாரதியார்

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்று அன்றே தம் பாடல்களின் வாயிலாக எடுத்துரைத்துள்ளார்.

கனவைச்சூடிய நட்சத்திரம் என்ற நாவலில் ஜான்சி என்ற பெண்ணின் வாழ்வில் ஏற்படும் இன்னல்களையும் அதனை அவள் எதிர்நோக்கி வாழ்வை ஜெயித்து காட்டுவதையும் சுட்டிக் காட்டியுள்ளார் திலகவதி ஐபிஎஸ் அவர்கள்.

ஔவையாரும் பாரதியாரும்:

பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி ஔவையின் ஆத்திச்சூடியைத் தழுவி எழுதப்பட்டதெனினும் ஔவையின் பழமை கருத்துக்களுக்கு மாறுபட்டு காலத்துக்கேற்ற புரட்சிக்கருத்துகளைப் பாரதியார் பாடியிருக்கும் திறத்தினைப் பின்வரும் அட்டவணையில் தெளிந்து இன்புறலாம்.

| வ. எண். | ஔவையின் ஆத்திச்சூடி | பாரதியின் ஆத்திச்சூடி |
|---|---|---|
| 1. | ஆறுவது சினம் | ரௌத்திரம் பழகு |
| 2. | செய்வன திருந்தச்செய் | செய்வது துணித்து செய் |
| 3. | தீவினை அகற்று | தீயோர்க்கு அஞ்சேல் |

முடிவுரை:

தமிழ் உணர்வு, இறையுணர்வு, விடுதலையுணர்வு ஆகிய மூன்றிலும், கருத்தூன்றி நின்றவர் பாரதி. எதிர்கால கனவுகளின் எழுத்து வடிவம் பாரதியார். அவர் வழி நாமும் நடந்து நாடும் வீடும் போற்ற வாழ முயல்வோமாக.


<u>துணை நூல் பட்டியல்</u>

1. புலவர் செந்துரைமுத்து — பாரதி சிந்தனைகள், ப.66, பழனி நிலையம், சென்னை – 14.

| | | |
|---|---|---|
| *2.* | *மாகாகவி பாரதியார்* | *பாரதியார் கவிதைகள்,*<br>*சுவாமிமலைப் பதிப்பகம்,*<br>*சென்னை – 17.* |
| *3.* | *பேராசிரியர். மு. சாயுபு மரைக்காயர்* | *பன்முகப் பார்வையில் பாரதியார் (தொகுப்பு நூல்)*<br>*கங்கைப் புத்தக நிலையம்,*<br>*சென்னை – 17.* |
| *4.* | *திலகவதி I.P.S* | *கனவைச்சூடிய நட்சத்திரம்,*<br>*நர்மதா பதிப்பகம்,*<br>*முதல் பதிப்பு, பக். 191.* |
| *5.* | *Encyclopedia Britannica Vol.1.P.154* | |
| *6.* | *ஔவையார் (ந.மு. வேங்கடசாமி நாட்டார்)* | *நீதி நூல்கள்*<br>*முல்லை நிலையம்*<br>*சென்னை – 117.* |


********* ********* ********** ********* ********* ********** ********** **********